முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் குருதட்சணாமூர்த்தி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.03.2019, வெள்ளிக்கிழமை

1. **தரும பலமிக்க நல்லுலகை**
**தவபலம் கொண்டே அமைத்திட**
**ஆறுமுகனார் அவதாரமாக வந்த**
**அய்யனே ஆறுமுக அரங்கனே**

2. அரங்கனே உன் பலம் உலகமறிய
அகிலமே ஞானயுகமாகுமெனக் கூறி
வரங்களென **விளம்பி சேல் திங்கள்**
**வளமுற ஏகதிகதி புகரோன் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 1ம் நாள் 15.03.2019, வெள்ளிக்கிழமை)**

3. **வாரமதில் குருதட்சணாமூர்த்தி யானும்**
வழங்குவேன் நித்ய பிரசன்ன ஆசிதனை
தாரக மந்திரமாம் சடாட்சரத்தை
தவராஜன் உபதேசமாக ஏற்று

4. ஏற்று வழிபாடு தொடரும் மக்களுக்கு
ஏழ்மை ருண ரோகம் அகன்றோடும்
ஆற்றல் தரும் அரங்கன் குடிலின்
அருளமுது உண்டு வரும் மக்களுக்கு

5. மக்களுக்கு பிணி கண்டம் துன்பமிலா
மரணம் வெல்லும் சக்தி கூடும்
தேக்கம் மனச் சோர்வு என்பதில்லா
தெளிவும் திடமும் ஞானமும் கூடும்

6. கூடுமே அரங்கன் அறமதில்
கொடையென வாரி வழங்கிடுவோர்க்கு
ஈடுபடும் ஜீவனமதில் பெருலாபம் பலம்
எக்காலமும் தடையிலா பொருள் வளமும் காணும்

7. காணவே முழுமதி விழா தோறும்
கண்டு வணங்கி அரங்கமகானை
ஞானபண்டிதா என வேண்டியே
நம்பிக்கை கொண்ட சீடர்கட்கு

8. சீடர்கட்கு சூட்சும சக்தி பலமும்
சிக்கலென்பதில்லா நல்வாழ்வும்
இடர்களில்லா ஏற்றம் பதவியும்
எளியவர்க்கு அருளும் உயர் குணமும்

9. குணமும் சிறந்து கலியுகத்தில்
குருராசன் தேர்வு கண்டிடும்
ஞானவான்களாக சிறப்பர்
ஞானபண்டிதன் ஆசி அருள்பட

10. அருள்பட அனைத்து வகையிலும்
அளவில்லா நிலை உயர்ந்து
அருள்மிகு ஆற்றல் கொண்ட
அரங்கன் வழி ஞானிகளாவர்

11. ஆவரே அரங்கனால் சிறப்பு
ஆவரே அறந்தன்னால் சிறப்பு
புவனமாற்றம் கண்டிடும் வண்ணம்
பேராசான் வழி வருகவே தேறுவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் குருதட்சிணாமூர்த்தி அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

தருமபலம் மிக்க நல்லுலகத்தினை தவபலத்தினைக் கொண்டே அமைத்து இவ்வுலகினில் கலியுகத்தை மாற்றி ஞானயுகமாக ஆக்கிடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது தவபலத்தினை அருள்பலத்தினை, தருமபலத்தினை ஞானஆற்றலை உலகோர் அறிந்து உம்மை ஏற்று பின்தொடர இவ்வுலகம் ஞானஉலகமாக மாறிடும் எனக் கூறியே உலக நலம் கருதியே **விளம்பி வருடம் பங்குனி மாதம் முதல் நாள் 15.03.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே குருதட்சிணாமூர்த்தி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் குருதட்சிணாமூர்த்தி.

உலக மக்களெல்லாம் ஜென்மத்தைக் கடைத்தேற்றும் மந்திரமாக தாரகமந்திரமாக சடாட்சர மந்திரத்தை சரவணஜோதியே நமோ நம எனும் அருட்ஜோதி மந்திரத்தை முருகப்பெருமானின் திருநாமத்தினை தவராஜன் ஆறுமுக அரங்கமகா தேசிகரிடத்து உபதேசமாக ஏற்று அவரவரும் தினம்தினம் மறவாமல் பூஜைகள் செய்து வர வேண்டும்.

முருகப்பெருமானின் சடாட்சரமாகிய சரவணபவ எனும் மந்திரமதை தவறாமல் சொல்லி பூஜிக்கும் எல்லோருக்கும் ஏழ்மை அவர்களை விட்டு அகன்று ஓடும், கடன் பிரச்சனைகள் தீர்ந்துவிடும், அவர்களை விடாது பற்றிய தீராத நோய்களும் தீர்ந்து நீடிய ஆயுளைப் பெறுவார்கள்.

ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினிலே ஞானிகளை பூஜித்து வழங்குகின்ற அருளமுதாம் குடில் உணவினை உண்டு வருகின்ற மக்களுக்கு துன்பம் இல்லாத நோய்நொடிகள் இல்லாத மரணபயம் இல்லாத வாழ்வும் மரணத்தை வெல்லும் சக்தியும் பெருகி வாழ்வர்.

முருகப்பெருமானை வணங்குகின்றோர் வாழ்வில் தடைகள் ஏதும் வராது. மனச்சோர்வு அண்டாது எப்போதும் தெளிவான திடசிந்தையும் திடமான ஞானமும் பெற்று சிறப்பான வாழ்வினையே வாழ்வார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக நலம் கருதி செய்கின்ற தானதரும அறப்பணிகளிலே பங்கு கொண்டு தாராளமாய் பொருளுதவிகளை வாரி வழங்கி வருகின்றோர்க்கு அவர்கள் ஈடுபடுகின்ற வியாபாரத்திலும், தொழில்களிலும் பெரும் லாபம் உண்டாகும், சிறப்பான திடமான பலம்மிக்கதாய் அவர்களது வியாபாரமும் தொழிலும் அமையும். எக்காலத்தும் தடையில்லாத பொருள் வளமும் பெற்று சிறப்படைவார்கள்.

உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகா தேசிகர் பௌர்ணமிதோறும் நடத்துகின்ற சிறப்பு சித்தர்கள் ஞானபூஜைகளிலே கலந்து கொண்டு முற்றுப்பெற்ற ஞானிகளின் திருவடிகளை பயபக்தியுடன் வணங்கி ஏழாம் படை வீட்டு நாயகனாய் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகாதேசிகனை முருகப்பெருமானாகவே எண்ணி ஞானபண்டிதா, முருகா, ஆறுமுகா, ஆறுமுக அரங்கமகா தேசிகா என்றே முருகனும் அரங்கனும் ஒன்றே எனும் மாறாத திடசிந்தையுடன் நம்பிக்கையுடன் வணங்கி வருகின்ற அரங்கரின் அன்பு சீடர்களுக்கு சூட்சும சக்திகள் பெருகி பலம்மிக்கவராய் ஆகி சிக்கல்கள் என்பதே இல்லாத வகையில் நல்வாழ்வு அமைந்திடும். இடர்கள் இல்லாத முன்னேற்றங்கள் பல உண்டாகும். நல்ல பதவிகளை அவர்கள் பெறுவார்கள். ஏழை எளியோர்க்கு உதவிகள் செய்யும் உயர்வான

குணமும் பெருகி கலியுகத்தினில் அரங்கர் தேர்ந்தெடுக்கும் ஞானயுக ஞானவான்களாக தேர்வு தேர்ச்சி பெற்று பலவிதமான சிறப்புகளை அடைவார்கள். அவர்களெல்லாம் ஞானபண்டிதன் முருகப்பெருமானின் அருளாசிகளைப் பெற்று எல்லாவகையிலும் அளவிலாது பெரிய நிலைக்கு வந்து அருள் பெருகி ஆற்றல்மிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக ஞானிகளாக ஆகிடுவார்கள்.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகானை வணங்கிட்ட அவரெல்லாம் அரங்கமகானால் பல பெரும் சிறப்புகளை அடைவார்கள். அவர்கள் செய்திட்ட தானதருமங்களினால் சிறப்புகளை பெறுவார்கள். பேராசான் ஆறுமுக அரங்கமகானை பின்தொடர்ந்திட்ட அவரெல்லாம் யுகமாற்றம்தனை படைத்திடும் வகையில் தேறி யுகமாற்றத்தில் பல சிறப்புகளையும் பதவிகளையும் பெற்று மேன்மேலும் சிறப்படைவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் குருதட்சிணாமூர்த்தி.

–சுபம்–